# கேள்வி அறிவித்தல்

## கிழக்கு மாகாணசபை

## அவசரகால இயற்கை அனர்த்த புனரமைப்பு திட்டம்

**தொகுதி – 1**

**கடனுதவி இல :- SL – P103**

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மாகாண மற்றும் கிராமிய வீதி புணரமைப்பிற்காக சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்திடம் (JICA) இருந்து அவசரகால இயற்கை அனர்த்த புனரமைப்புக்காக கடன் பெறப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதியை கீழ்க்காணும் அட்டவனை (1) இல் உள்ள ஒப்பந்த வேலைகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | ஒப்பந்த இல. | ஒப்பந்த பெயர் | இக்ராட் பெருந்தெருக்கள் பதிவின் ஆகக் குறைந்த தரம் | கேள்விப் பிணை ரூபா. |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | ENDRP/EP/TC/PI/01 | மாவடிச்சேனை இலங்கைத்துறை வீதி புனரமைப்பு | C2 | 4,300,000.00 |
| திருகோணமலை | குச்சவெளி | ENDRP/EP/TC/PI/02 | அமரவயல் தென்னமரவடி வீதி புனரமைப்பு | C3 | 1,800,000.00 |

**அட்டவணை (1)**

2. கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில், அமைச்சர் வாரிய நியமன பெறுகைக் குழு தவிசாளரினால் மேலே அட்டவனை (1) இல் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட (sealed) கேள்விகள் தகுதியான தகைமையுடைய கள்விதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

3. ஒப்பந்தத்தை பெற தகுதியுடைய கேள்விதாரர்கள் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராக இருப்பதோடு **இக்ராட்** நிறுவனத்தில் மேலே அட்டவனை (1) இல் கூறப்பட்ட பெருந்தெருக்கள் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தை பெறுவதற்கு பின்வரும் தகைமைகளை கொண்டிருப்பது அவசியமாகும்.

**நிதி மற்றும் அனுபவ அந்தஸ்து**

| ஒப்பந்த இல. | ENDRP/EP/TC/PI/01 | ENDRP/EP/TC/PI/02 |
|---|---|---|
| கடந்த 05 வருடங்களில் சராசரி வருடாந்த கட்டுமான புரள்வு ரூபா. (மில்லியன்) | 430 | 178 |
| பிரதான ஒப்பந்தகாரராக உத்தேசிக்கப்பட்டிருக்கும் வேலைக்கு ஒப்பான தன்மையினை கொண்ட ஆகக்குறைந்த ஒரு வேலைத்திட்டத்தில் கடந்த 05 வருடங்களில் பெற்ற அனுபவம் ரூபா(மில்லியன்) | 344 | 142 |
| உத்தேசிக்கப்பட்டிருக்கும் வேலைக்கு ஒப்பான தன்மையினை கொண்ட ஆகக்குறைந்த ஒரு வேலைத்திட்டத்தில் கடந்த 05 வருடங்களில் பெற்ற அனுபவம். | 4.5 மீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட அகலமும் 10 கிலோ மீற்றர் நீளமுள்ள அஷ்பால்ட் மேற்பரப்பு வீதி | 4.5 மீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட அகலமும் 5 கிலோ மீற்றர் நீளமுள்ள அஷ்பால்ட் மேற்பரப்பு வீதி |

## வேலைக்காரர் தொகுதி (இரண்டு பொதிகளுக்கும்)

| நிலை | தகமை | மொத்த வேலை அனுபவம் (வருடம்) | ஒப்பான வேலை அனுபவம் (வருடம்) | ஒப்பான நிலை அனுபவம் (வருடம்) |
|---|---|---|---|---|
| திட்ட முகாமையாளர்- 1 இல | விஞ்ஞானமானி(எந்திரி)- குடிசார் /சமனான | ≥15 | ≥10 | ≥3 |
| சிரேஷ்ட நெடுஞ்சாலை /வடிவமைப்புப் பொறியாளர் - 1 இல | விஞ்ஞானமானி(எந்திரி)- குடிசார் /சமனான | ≥10 | ≥5 | ≥2 |
| மூலப்பொருள் பொறியாளர் - 1 இல | விஞ்ஞானமானி(எந்திரி)- குடிசார் /சமனான குடிசார் குடிசார் எந்திரவியல் பட்டம் | ≥10 | ≥5 | ≥2 |

**தேவையான உபகரணம் (இரண்டு பொதிகளுக்கும்)**

| | உபகரண வகை | தொகை | கொண்டிருக்கும் திறன் |
|---|---|---|---|
| 1. | Asphalt Plant | 01 | 40 TPH |
| 2. | Asphalt Paver | 01 | 13 டன் (3.5m – 5.0m width screed) |
| 3. | Pneumatic tyre roller | 01 | 10 – 20 டன் கொண்டிருக்கும் திறன் |
| 4. | Vibrating Roller | 02 | 8 – 10 டன் |
| 5. | Bitumen Distributor | 01 | |
| 6. | Motor Grader | 01 | ஆகக்குறைந்தது 120 HP |
| 7. | Concrete mixer with load cell weight batcher 7/10 | 01 | |
| 8. | Air Compressor | 01 | |
| 9. | Power broom | 01 | |
| 10. | Water bowser | 01 | |
| 11. | Plate Compactor | 02 | |

**அட்டவணை (2)**

5. சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்தினதும் ஜப்பானிய வெளிநாட்டு அபிவிருத்தி உதவியினதும் கடனுதவியின் கீழ் கோரப்படும் ஒப்பந்தங்களின்படி ஒப்பந்தக்காரர்கள், கேள்விதாரர்கள் கேள்வி நடைமுறையின் போதும் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் போதும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்தினதும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினதும் தேவைக்கிணங்க உயர்தர தொழில்முறை நியமங்களை பேண வேண்டும். சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்தின் கொள்கைக்கிணங்க

   i. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு குறித்த கேள்விதாரர் தகுதியானவர் என பரிந்துரை செய்யப்படுமிடத்து அவர் ஊழல்/மோசடி நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருப்பின் அவரது ஒப்ந்தத்தை வழங்குவதற்கான தீர்மானம் நிராகரிக்கப்படும்.

   ii. குறித்த ஒப்பந்தக்காரர்கள் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்தினால் அல்லது ஜப்பானிய வெளிநாட்டு உதவியினால் நிதியுதவி செய்யப்படும் வேறொரு ஒப்பந்தத்தில் போட்டியிடும்போதோ நிறைவேற்றும்போதோ ஊழல்/மோசடி நடவடிக்கைகளில் எச்சந்தர்பத்தில் ஈடுபட்டிருப்பினும் அவர் குறித்த காலத்திற்கு சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய நிறுவனத்தின் வெளிநாட்டு அபிவிருத்தி உதவியினால் கடனுதவி செய்யப்படும் ஒப்பந்தங்களில் கடமையாற்றுவதற்கு தகுதியற்றவராக இனங்காணப்படுவார்.

6. ஒரு கேள்விதாரர் கூட்டுமுயற்சி அமைப்பின் எல்லா அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய ஒருவர்

   I. குறித்த திட்டத்தின் கேள்வி நடவடிக்கைகளை தயாரிப்பதற்கோ அல்லது செயற்படுத்துவதற்கோ குறித்த தொழில் வழங்குனரால் ஆலோசனை சேவையினை பெற ஈடுபடுத்தப்பட்ட நிறுவனம் / அமைப்பாக இருத்தல் கூடாது.

II. மேலே பந்தி (i) இல் குறிப்பிட்ட நிறுவனம்/ அமைப்புடன் ஏதாவது கூட்டு நிறுவனமாகவோ (தலைமை நிறுவனம் உள்ளடங்கலாக) பிணைப்பு நிறுவனமாகவோ இருத்தல் கூடாது.

III. ஒரு நிறுவனம்/ அமைப்பு தனது அலுவலர்களை முற்றாகவோ தற்காலிகமாகவோ ஆலோசனை வழங்குவதற்கு, தொழில் வழங்குனரால் கேள்வி நடவடிக்கைகளை தயாரிப்பதற்கோ அல்லது செயற்படுத்துவதற்கோ தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பிற்கு விடுவித்திருத்தல் கூடாது. மேலும் குறித்த திட்டத்திற்கு எவ்வகையிலும் பங்களிப்பு செய்யும் ஆளணியை கொண்டிருக்கவும் கூடாது.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை மாகாண பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், இல.03, பற்றிமாகிரி வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (மின்னஞ்சல: eproad@sltnet.lk ) அத்துடன் கேள்வி ஆவணங்களை மேலே குறிப்பிட்ட காரியாலயத்தில் 0900 மணி முதல் 1600 மணி வரை பார்வையிடலாம்.

8. முழுமையாக ஆங்கில மொழி மூலம் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மாகாணப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், இல.03, பற்றிமாகிரி வீதி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.10,000.00 ஐ காசாக செலுத்துவதன் மூலம் **16.01.2012** முதல் **14.02.2012** வரை **(0900 மணி முதல் 1500 மணி வரை)** பெற்றுக்கொள்ள முடியும்.

9. கேள்விகள் யாவும் **15.02.2012** ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக **தவிசாளர்/ அமைச்சர் வாரிய நியமன பெறுகைக் குழு, மாகாண பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி திணைக்களம், பற்றிமாகிரி வீதி, மட்டக்களப்பு** என்ற முகவரியில் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் அதே தினத்தில் உரிய நேர எல்லை முடிவடைந்ததும் உடனடியாக கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் பணிமனையில் **01.02.2012** ஆம் திகதி காலை **10.00** மணிக்கு கேள்விக்கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இக்கூட்டத்திற்கு சமூகமளிப்பது வரவேற்கத்தக்கது. கேள்விதாரர்கள் முன் கேள்விக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமுன் வேலைத்தளத்தை பார்வையிடுவதற்கான ஆயத்தங்களை தாமாகவே மேற்கொள்ள வேண்டும்.

11. கேள்விகள் அவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

12. அனைத்து கேள்விகளும் மேலே அட்டவனை(1) இல் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு **"பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு வரையப்பட்ட கேள்விப்பிணை சான்றிதழை

கொண்டிருப்பதுடன் அவை கேள்விகள் செல்லுபடியாகும் இறுதித்தினத்திலிருந்து 28 நாட்கள் கூடுதலாக் அதாவது **12.06.2012** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

13. கேள்விதாரர் ஒன்று அல்லது இரண்டு பொதிகளுக்கு கேள்வி சமர்பிக்கலாம் அவ்வாறு சமர்ப்பிக்கும் பட்சத்தில் இரண்டு பொதிகளுக்கிமான ஒன்றாக இணைந்த தேவையும் தகுதியும் கேள்விதரர் கொண்டிருக்க வேண்டும். வேலை தருநர் மேற்கூறப்பட்ட அடிபடையிலேயே கேள்விகளை ஒப்பிட்டு பரிசீலனை செய்வார்

தவிசாளர் /பிரதம செயலாளர்,

அமைச்சர் வாரிய நியமன பெறுகைக் குழு,

கிழக்கு மாகாணம்,
கன்னியா வீதி,
வரோதய நகர்,
திருகோணமலை.